2021 ஜுன் 22]

(உ) திரு. எம். அனந்தகிருஷ்ணன், அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெளிப்படைத் தன்மை மிகுந்த நிருவாகம், மாணவர்களின் கல்வி முன்னேற்றம் ஆகிய இரண்டையும் தனது இரு கண்கள்போல் கருதி கல்வித் தொண்டாற்றிய 'அறிவுக் களஞ்சியம்' திரு. எம். அனந்தகிருஷ்ணன் அவர்கள், 29–5–2021 அன்று திடீரென மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

திரு. எம். அனந்தகிருஷ்ணன் அவர்கள் மாணவர் சமுதாயத்தின் கலங்கரைவிளக்கமாகத் திகழ்ந்தவர். கான்பூர் ஐ.ஐ.டி.–யின் தலைவராகவும், மாண்புமிகு முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களது ஆட்சிக் காலத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் நியமிக்கப்பட்டு, உலகத்தரம் வாய்ந்த உயர் கல்வியை அளிக்க உட்கட்டமைப்பை உருவாக்கி, அண்ணா பல்கலைக்கழகத்தின் புகழை உலகெங்கும் பரப்பியவர். தமிழ் இணைய மாநாடு நடத்தி, இணையத்தில் தமிழின் பயன்பாட்டை எளிமைப்படுத்த உதவியவர். பத்மஸ்ரீ' விருது பெற்ற பெருமைக்குரியவர். அன்னாரது மறைவு உயர் கல்வித் துறைக்கும், மாணவர் சமுதாயத்திற்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், மாணவச் சமுதாயத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)